**செய்தி வெளியீடு எண்: 228** **நாள்: 08.03.2019**

**செய்தி வெளியீடு**

சவூதி அரேபிய நாட்டில் ரியாதிலுள்ள முன்னணி மருத்துவமனைக்கு 55 வயதிற்க்குட்பட்ட, இரண்டு வருட பணி அனுபமுள்ள ஆண்/பெண் மருத்துவர்கள், 35 வயதிற்க்குட்பட்ட டிப்ளோமா/பி.எஸ்.சி தேர்ச்சி பெற்ற பெண் செவிலியர்கள், ரேடியோலோஜி டெக்னிசியன்கள், ஆண் லேப் டெக்னிசியன்கள் மற்றும் பிசியோதெரப்பிஸ்ட்கள் தேவைப்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவர்களுக்கு ரூ.3,75,000/-, செவிலியர்களுக்கு ரூ.50,000/-, ரேடியோலோஜி டெக்னிசியன்கள், லேப் டெக்னிசியன்கள மற்றும் பிசியோதெரப்பிஸ்ட்களுக்கு ரூ.56,000/- வரை மாத ஊதியமும், இலவச விமான டிக்கெட், உணவுப்படி, இருப்பிடம், விசா, மருத்துவச் சலுகை, மற்றும் சவுதி அரேபிய நாட்டின் சட்டத்திட்டத்திற்க்குட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ளவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட் மற்றும் ஆதார் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemclsn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 31.03.2019க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணிவிவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளமான www.omcmanpower.com மற்றும் 044-22505886/22500417/8220634389/9566239685 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு நிறுவனத்தின் முகவர் எண். Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84 ஆகும்.

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**